# ????????????? ???????????? ???????
# ?????????? ??????? ?????????????


உண்மைக்கும் நீதிக்குமான போராட்டப் பேரியக்கம்

Movement for Truth and Justice

- #hunger4truth_justice -

Diaspora Civil Society Forum

புலம்பெயர் சிவில் சமூக சம்மேளனம்

பத்திரிகை அறிக்கை

- உடனடி வெளியீட்டுக்கானது -

15 மார்ச் 2021

லண்டன்: மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகை அவர்களால் முன்னெடுக்கப்பட்ட உண்மை மற்றும் நீதிக்கான உணவுத்தவிர்ப்புப்போராட்டத்தின் வெற்றி இலக்கு எட்டப்பட்டு உத்தியோகபூர்வமாக உண்ணாநிலைப் போராட்டத்தினை நிறுத்தும் முடிவினை அறிவித்தல்.

இன்று உண்மை மற்றும் நீதிக்கான போராட்டத்தில் 17 நாட்கள் தொடர்ச்சியான உண்ணாநிலைக்குப் பின்னர் அம்பிகை அவர்கள் தனது நான்கு அம்சக் கோரிக்கைகளில் ஒன்றிற்கு மேற்பட்டவற்றை உள்ளடக்கிய ஐ.நா தீர்மானத்தை வெற்றிகரமாகப் பெற்ற பின்னர் தனது உண்ணாநிலைப் போராட்டத்தினை கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்துப் பிரஜையும் இங்கிலாந்து அரசாங்கத்தின் முன்னாள் அரச ஊழியரும் அர்ப்பணிப்புள்ள மனித உரிமை செயற்பாட்டாளரும் மற்றும் இனப்படுகொலையை தடுப்பது மற்றும் தண்டிப்பதற்கான சர்வதேச மையத்தின் பணிப்பாளர்களில் ஒருவருமான அம்பிகை அவர்கள் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தனது உண்மை மற்றும் நீதிக்கான உண்ணாநிலைப் போராட்டத்தினை லண்டனில் 27 ஆம் திகதி பெப்ரவரி மாதம் ஆரம்பித்தார். தமிழ் சமூகத்தின் தியாக தீபங்களான லெப் கேணல் திலீபன் மற்றும் அன்னை பூபதி ஆகியோரின் புனித வழியில் தொடர்ந்து அவர்களின் ஆசீர்வாதங்களுடன் தனது கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளார்.
அகிம்சை வழியில் நடாத்தப்பட்ட உண்ணாநிலைப் போராட்டம் தமிழர்களின் வரலாற்றில் அதன் இலக்குகளை எட்டியது இதுவே முதல் முறையாகும்.

பின்னணி

இலங்கை அரசு தமிழ் தேசியத்தின் மீது இனப்படுகொலையை மேற்கொண்டதுடன், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை இன்று வரை தண்டனைகளின்றி தொடர்கிறது. நினைவுச்சின்னங்களை அழித்தல், சமத்துவத்தினை தடை செய்தல், மொழி மற்றும் வரலாற்றினை நீக்குதல் போன்றவற்றினூடாக தமிழ் இனவழிப்பு தடையின்றி தொடர்கிறது.

## -??????????? ??????????? ???????? ??????????




ஐ.நா. வுக்கான பிரித்தானியாவின் தீர்மானத்தின் இறுதி வரைவுக்குள் திருமதி. அம்பிகை செல்வக்குமாரின்

கோரிக்கைகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை வழங்கப்பட்டுள்ள நிலையில், அவரது போராட்டம் அதன் இலக்கை அடைவதில் வெற்றிபெற்றதுடன் மற்றும் தமிழ் சமூகத்தின் ஒரு புதிய சாதகமான முன்மாதிரியாக அமைந்துள்ளது என குறித்த அகிம்சை போராட்டத்துக்கான 'உண்மைக்கும் நீதிக்குமான போராட்ட பேரியக்கம்' தெரிவித்துள்ளது.

திருமதி. அம்பிகை செல்வக்குமாரின் அகிம்சை போராட்டத்தினை அடிப்படையாக கொண்டு உருவாகிய மேற்படி உண்மைக்கும் நீதிக்குமான போராட்டப் பேரியக்கம் அம்பிகையின் இன்றைய இறுதிநாள் உண்ணாவிரத முடிவின் போது வெளியிட்ட ஊடக அறிக்கை முன்னாள் தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளரும் பொருளாதார ஆய்வாளருமான திரு.பாலா மாஸ்டரினால் முழுமையாக வாசிக்கப்பட்டது.

அம்பிகையின் அகிம்சைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கான பின்னணி, கோரிக்கைகள், வெற்றிகள், எனும் தலைப்புகளிட்டு வெளிடப்பட்டுள்ள 5 பக்கங்கள் கொண்ட குறித்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அம்பிகையின் போராட்ட வெற்றி அகிம்சைபோராட்டங்களின் மூலம் இலக்குகளை அடைய முடியும் எனும் நம்பிக்கையை தருகிறது. மேலும் விடுதலைக்கான போராட்டத்தை மேற்கொள்வதற்கும் தொடர்வதற்கும் உலகளவில் ஈழத் தமிழர்களின் புதிய தலைமுறையினை உருவாக்குவாதில் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

மற்றும் தமிழ் அல்லாத பல இளைஞர்களை சமூக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை நம்பும்படி அவர் ஊக்கப்படுத்தியுள்ளார். அவரது தைரியமான எதிர்பார்ப்பும் போராட்டத்தின் மீதான அவரது உறுதியற்ற அர்ப்பணிப்பும் எப்போதும் நினைவில் இருக்கும். மேலும் இந்தப் போராட்டத்தினை முழுமையாக ஆதரித்து அவர்களின் இடைவிடாத ஆதரவை வழங்கிய மற்றும் அதை ஒரு வரலாற்றறு வெற்றியாக மாற்ற பங்களித்த அனைத்து அமைப்புக்களுக்கும் மக்களுக்கும் நன்றி கூறுகின்றோம். இது உலகெங்குமுள்ள தமிழர்களின் ஒற்றுமைக்கான வெற்றி என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

https://youtu.be/Sx-_L2SIiIs

பத்திரிகை அறிக்கை
- உடனடி வெளியீட்டுக்கானது -
15 மார்ச் 2021

லண்டன்: மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகை அவர்களால் முன்னெடுக்கப்பட்ட உண்மை மற்றும் நீதிக்கான உணவுத்தவிர்ப்புப்போராட்டத்தின் வெற்றி இலக்கு எட்டப்பட்டு உத்தியோகபூர்வமாக உண்ணாநிலைப் போராட்டத்தினை நிறுத்தும் முடிவினை அறிவித்தல்.

இன்று உண்மை மற்றும் நீதிக்கான போராட்டத்தில் 17 நாட்கள் தொடர்ச்சியான உண்ணாநிலைக்குப் பின்னர் அம்பிகை அவர்கள் தனது நான்கு அம்சக் கோரிக்கைகளில் ஒன்றிற்கு மேற்பட்டவற்றை உள்ளடக்கிய ஐ.நா தீர்மானத்தை வெற்றிகரமாகப் பெற்ற பின்னர் தனது உண்ணாநிலைப் போராட்டத்தினை கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்துப் பிரஜையும் இங்கிலாந்து அரசாங்கத்தின் முன்னாள் அரச ஊழியரும் அர்ப்பணிப்புள்ள மனித உரிமை செயற்பாட்டாளரும் மற்றும் இனப்படுகொலையை தடுப்பது மற்றும் தண்டிப்பதற்கான சர்வதேச மையத்தின் பணிப்பாளர்களில் ஒருவருமான அம்பிகை அவர்கள் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தனது உண்மை மற்றும் நீதிக்கான உண்ணாநிலைப் போராட்டத்தினை லண்டனில் 27 ஆம் திகதி பெப்ரவரி மாதம் ஆரம்பித்தார். தமிழ் சமூகத்தின் தியாக தீபங்களான லெப் கேணல் திலீபன் மற்றும் அன்னை பூபதி ஆகியோரின் புனித வழியில் தொடர்ந்து அவர்களின் ஆசீர்வாதங்களுடன் தனது கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளார்.
அகிம்சை வழியில் நடாத்தப்பட்ட உண்ணாநிலைப் போராட்டம் தமிழர்களின் வரலாற்றில் அதன் இலக்குகளை எட்டியது இதுவே முதல் முறையாகும்.

## பின்னணி

இலங்கை அரசு தமிழ் தேசியத்தின் மீது இனப்படுகொலையை மேற்கொண்டதுடன், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை இன்று வரை தண்டனைகளின்றி தொடர்கிறது. நினைவுச்சின்னங்களை அழித்தல், சமத்துவத்தினை தடை செய்தல், மொழி மற்றும் வரலாற்றினை நீக்குதல் போன்றவற்றினூடாக தமிழ் இனவழிப்பு தடையின்றி தொடர்கிறது. தமிழர்களின் மனித உரிமை பறிக்கப்பட்டு யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட 12 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் தங்களிற்கான நீதிக்காகவும் அதற்கான பரிகாரங்களிற்காகவும் நாடி நிற்கின்றார்கள். இலங்கை அரசு தமிழ் தேசியத்தின் மீது இனப்படுகொலையை தொடர்வது மட்டுமல்லாமல் அதற்கு ஒருபடி மேலே சென்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30/1, 34/1 மற்றும் 40/1 ஆகியவற்றின் இணை அனுசரணையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகியதுடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் செயன்முறையிலிருந்தும் விலகியது. எனவே பாதிக்கப்பட்டவர்கள், தமக்கும் நண்பர்களிற்கும் அயலவர்களிற்கும் ஏற்பட்ட அட்டூழியங்களிற்கு நீதி கிடைக்க வேறு எந்த வழியும் இன்மையினால் பிரித்தானிய அரசினை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரைக்க கோர வேண்டிய நிலையில் இருந்தார்கள்.

# ??????? ?????????? ????????????
# ???????????? ?????????? ???????




## ????? ??????????? ????????? ??????????
## ?????????? ??????

https://youtu.be/AEZaNXRPSY8
”எனது போராட்டத்திற்கு வலுச்சேர்க்க கிளர்ந்தெழுந்த இளம் சமுதாயத்தின் உத்வேகம் கண்டு பூரிப்படைகிறேன். தமிழினத்திற்கான எதிர்கால நம்பிக்கைய அவர்கள் ஏற்படுத்திவிட்டார்கள்” என்ற பெருமித வாரத்தைகளுடன் திருமதி அம்பிகை செல்வக்குமார் சற்று முன்னர் தனது உண்ணாவிரதப்போராட்டத்தை முடித்துக்கொண்டார்.

பிரித்தானிய அரசிடம் முன்வைத்த 4 கோரிக்கைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் பிரித்தானியாவில் நேற்று கிளர்ந்தெழுந்த புலம்பெயர் தமிழர்களின் வேண்டுதலாகவும் உலகெமெங்குமுள்ள ஒட்டுமொத்த தமிழினத்தினதும் அமைப்புக்கள் கட்சிகளினதும் வேண்டுகோலையும் ஏற்று அம்பிகையின் உண்ணாவிரதப் போராட்டம் இன்றுடன் முடிவுக்கு வந்தது.

17 ஆவது நாளாகிய இன்று உண்மைக்கு நீதிக்குமான போராட்ட பேரியக்கத்தின் உண்ணாவிரதம் தொடர்பான ஊடக அறிக்கை வாசிக்கப்பட்டதை தொடர்ந்து குருக்களிடமிருந்து பாலும் பழமும் பெற்று உண்டு தனது

அகிம்சை வழி உண்ணாவிரதப் போராட்டத்தை திருமதி. அம்பிகை செல்வக்குமார் நிறைவுக்கு கொண்டுவந்தார்.







பிரித்தானிய அரசிடம் 4 அம்சக்கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி அவற்றில் ஒன்றையேனும் நிறைவேற்றினால் போராட்டத்தை கைவிடுவேன் என இன்றுடன் 17 நாட்கள் பசித்திருந்த அம்பிகை, கோரிக்கைகளில் ஒன்று முழுமையாவும் இன்னொன்று அண்ணளவாகவும் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலேயே வெற்றியுடன் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளுமாறு பிரித்தானிய அரசாலும், பாராளுமன்ற

உறுப்பினர்களாலும் அனைத்து தமிழ் மக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பிகை முன்வைத்த அனைத்துலக சுயாதீன விசாரணை பொறிமுறையை உருவாக்குதல்(IIIM), அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) விசாரித்தல், சிறிலங்காவுக்கான தனியான அறிக்கையாளரை நியமித்தல், மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கருத்து கணிப்பு வாக்கெடுப்புக்கான ஐ.நா வின் பரிந்துரைத்தல் ஆகிய நான்கு அம்சக்கோரிக்கைகளில் பிரித்தானியாவின் ஐ.நா.வுக்கான இறுதி வரைபில் ஒரு புதிய விதமான அனைத்துலக சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்று (IIIM இன் முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய) உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிரந்த ஐ.நா. கண்காணிப்பளருக்கு பதிலாக, தொடர்ச்சியாண கண்காணிப்பு நடைமுறை ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

**[illegible]**

---

# [illegible]!




**[illegible]**

# ?????????? ????????? ?????????!




இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி கோரி பிரித்தானியாவில் அம்பிகை செல்வகுமார் முன்னெடுத்த அகிம்சைவழி உண்ணாவிரதப்போராட்டம் மாபெரும் வெற்றி கண்டுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றபட்டுள்ள நிலையில் பிரித்தானியாவில் நேற்று கிளர்ந்தெழுந்த புலம்பெயர் தமிழர்களின் வேண்டுதலாகவும் உலகெமெங்குமுள்ள ஒட்டுமொத்த தமிழினத்தினதும் அமைப்புக்கள் கட்சிகளினதும் வேண்டுகோலையும் ஏற்று அம்பிகையின் உண்ணாவிரதப்போராட்டம் இன்றுடன் முடிவுக்கு வரப்படவுள்ளது.

பிரித்தானிய அரசிடம் 4 அம்சக்கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி அவற்றில் ஒன்றையேனும் நிறைவேற்றினால் போராட்டத்தை கைவிடுவேன் என இன்றுடன் 17 நாட்கள் பசித்திருந்த அம்பிகை கோரிக்கைகளில் ஒன்று முழுமையாவும் இன்னொன்று அண்ணளவாகவும் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலேயே வெற்றியுடன் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளுமாறு பிரித்தானிய அரசாலும், பாராளுமன்ற உறுப்பினர்களாலும் அனைத்து தமிழ் மக்களாலும் கேட்கப்பட்டுள்ளார்.

அம்பிகை முன்வைத்த அனைத்துலக சுயாதீன விசாரணை பொறிமுறையை உருவாக்குதல்(IIIM), அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) விசாரித்தல், சிறிலங்காவுக்கான தனியான அறிக்கையாளரை நியமித்தல் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கருத்து கணிப்பு வாக்கெடுப்புக்கான ஐ.நா வின் பரிந்துரைத்தல் ஆகிய நான்கு அம்சக்கோரிக்கைகளில் பிரித்தானியாவின் ஐ.நா.வுக்கான இறுதி வரைபில் ஒரு புதிய விதமான அனைத்துலக சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்று (IIM இன் முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய) உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிரந்த ஐ.நா. கண்காணிப்பளருக்கு பதிலாக, தொடர்ச்சியான கண்காணிப்பு நடைமுறை ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

இந்நிலையிலேயே, திருமதி அம்பிகை செல்வக்குமார் மாபெரும் வெற்றியுடன் இன்று பிரித்தானிய நேரம் பி.ப. 3.00 -5.00 மணியளவில் தனது உண்ணாவிரதத்தை, மத தலைவர்கள் மற்றும் அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் முடித்துக்கொள்ள உள்ளார். இது நீண்டதொரு தமிழின போராட்ட வரலாற்றி அகிம்சைவழி மாபெரும் வெற்றியாகும். ஒட்டுமொத்த தமிழினத்தின் ஒற்றைக்குரலாய் அம்பிகை முன்னெடுத்த அறப்போராட்டத்திற்கு கிடைத்துள்ள வெற்றியாகும்.

அம்பிகையின் கோரிக்கையை நிறைவேற்றி அவரை காப்பாற்றுமாறு நேற்று பிரித்தானியாவில் மாபெரும் பேரணியை நிகழ்த்திய புலம்பெயர் தமிழர்களுக்கும் உலகெங்கும் அவருக்காக குரல் கொடுத்த தமிழினத்தின் ஒற்றுமைக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாக கருதப்படுகின்றது.

நிகழ்வினை இன்று மாலை இலண்டன் நேரம் 3.00 -5.00 மணிவரை நேரலையாக பின்வரும் இணைப்பில் மெய்நிகர் வழியாக உலெகெங்கும் உள்ள அனைவரும் பார்வையிட்டு அம்பிகைக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கமுடியும்.

https://us02web.zoom.us/j/86153063444?pwd=U1ZiY1lIVjRtZmNwZUFWNGNzV1k1UT09

மும்மத தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமாகவுள்ள குறித்த மெய்நிகர் நிகழ்வில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பன்னாட்டு அரசியல் பிரமுகர்களின் சிறப்புரைகளும் அம்பிகை செல்வக்குமாரின் வெற்றியுரையம் இடம்பெறவுள்ளது.


இதனிடையே, நேற்று அம்பிகைசெல்வக்குமாரின் கோரிக்கையை நிறைவேற்றி அவரை காப்பாற்றக்கோரி அவரது போராட்டத்தளத்தின் முன் ஒன்றுதிரண்ட புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.




அத்துடன் வழமைபோல் நடைபெறும் அம்பிகையின் ஆதரவு மெய்நிகர் நிகழ்ச்சியிலும் அம்பிகையின் போராட்டம் வெற்றிப்பாதையை அடைந்துள்ளது எனவே போராட்டத்தை நிறைவு செய்யுங்கள் என்ற கோரிக்கைகளுமே வலுப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் நேற்று பி.ப. 3 மணிக்கு ஆரம்பமான மெய்நிகர் நிகழ்வில் Earling ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூஜை ஒளிபரப்பப்பட்டதுடன் Enfield நாகபூசணி அம்மன் ஆலய குருக்கள் கமலநாதன் அமெரிக்காவிலிருந்து அருட்தந்தை றொகான் டொமினிக் மற்றும் தமிழகத்திலிருந்து ஷாகுல் ஹமிதத்தின் புதல்வி பாத்திமா பஹானா ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து பிரித்தானிய தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாம் டெரி அவர்களின் ஆதரவு அறிகை தொடர்பான கண்ணோட்டமும் தாயகத்திலிருந்து தமிழர் மரபுரிமை பேரவையின் தலைவர் அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங், அனைத்துலக மக்களவை சார்பில் திரு. கோபாலபிள்ளை ஜெயசங்கர், ஜேர்மனிலிருந்து வழக்கறிஞர் மாற்றி தேவதாஸ், திருமதி வாசுகி சுதாகர்-தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – மகளிரணிப் பொறுப்பாளர், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர், தொழிற்கட்சிக்கு ஆதரவான தமிழர்கள் அமைப்பின் தலைவர் திரு. சென் கந்தையா ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

- 
Recording
Talking:
LADIES
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave



- 
Recording
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave


- 


Recording
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave


- 

Recording
Appoint Permanent Rapporteur
Hunger strike for Truth & Justice
உண்மைக்கும் நீதிக்குமான உணவு தவிர்ப்புப் போராட்டம்
Ambihai Selvakumar
kamalanathakurukkal
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 
Recording
Hunger strike for Truth & Justice
உண்மைக்கும் நீதிக்குமான உணவு தவிர்ப்புப் போராட்டம்
Ambihai Selvakumar
Vasugi
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave
- 
Recording
Voice
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 
Recording
Voice
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 
Recording
Appoint Permanent Rapporteur
UN sponsored referendum in the North and East of Sri Lanka
Hunger strike for Truth & Justice
உண்மைக்கும் நீதிக்குமான உணவு தவிர்ப்புப் போராட்டம்
Ambihai Selvakumar
judenixon edward
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 
Recording
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave
- 
Recording
Voice
UK NEWS
LONDON
LIVE
உணவு தவிர்ப்பு போராட்ட நோக்கம் நிறைவேறுவதை உறுதி
செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளேன்
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 

- 


அத்துடன் ஈழ பாரதி எனும் ஈழக்கவிஞர் யூட் நிக்சன் எட்வேட்டின் கவிதையும் சிறப்புப் பாடல்களும்இ கனடாவிலிருந்து சிறப்பு நடனம் இடம்பெற்றிருந்தன.

17 ஆவதும் இறுதி நாளுமாகிய இன்றைய மெய்நிகர் நிகழ்வு வழமை போல் பிரித்தானிய நேரம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வில் நீங்களும் இணைந்து அம்பிகையின் போராட்டத்திற்கு ஆதரவு சேர்க்க பின்வரும் இணைப்பில் இணைந்துகொள்ளலாம்.

https://us02web.zoom.us/j/86153063444?pwd=U1ZiY1lIVjRtZmNwZUFWNGNzV1k1UT09